DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 1

| | | | |
|---|---|---|---|
| Name | : Poomalai | Father/Husband Name: Boominathan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.02.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 8 மணியளவில் சத்யா என்பவரை முருகதாஸ் அடித்துக்கொண்டிருந்தபோது சத்தம்கேட்டு நானும் என் கணவரும் சென்று விலக்கிவிட்டோம். பிறகு 2 நாட்கள் கழித்து மாலை சுமார் 5 அல்லது 5.30 மணியளவில் நான் சமைத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி வந்து தேவடியா, மூக்கரச்சி என அசிங்கமாக பேசி சத்யாவை அடிக்கும்போது நீ எப்படி வந்து விலக்கிவிடலாம் என்று கேட்டு கம்பால் என்னை தலையின் வலதுபக்கத்திலும், வலது முழங்கையிலும் அடித்த இரத்தக்காயப்படுத்தினார். அப்போது சத்யா, அமராவதி, சுமதி, அரிச்சந்திரன் ஆகியோர் விலக்கிவிட்டார்கள், அப்போது நான் மயக்கமாகிவிட்டேன், அதன்பிறகு என்னை ஆம்புலன்சில் ஏற்றி மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தனர். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்ததுதான், அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். போலீசார் என்னை மருத்துவமனையில் சிகிச்சையிலிருந்தபோது விசாரித்து இந்த கையெழுத்தை வாங்கினார்கள். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும். நான் மருத்துவமனையில் ஒருவாரகாலம் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 2

Name : Boominathan Father/Husband Name: Chinnaiahambalam

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 05.02.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1 என் மனைவி. ஆஜர் எதிரியை தெரியும். சுமார் 3 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் இரவு 8 மணியளவில் சத்யா என்பவரும் முருகதாஸ் என்பவரும் சண்டைபோட்டுக்கொண்டிருந்தார்கள். நானும் என் மனைவியும் விலக்கிவிட்டோம். பிறகு 2 நாட்கள் கழித்து மாலை சுமார் 5 மணியளவில் என் மனைவி வீட்டில் சமைத்துக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி கம்பை எடுத்து வந்து கன்டாரஓலி என அசிங்கமாக பேசி சத்யாவை அடிக்கும்போது நீ எப்படி வந்து விலக்கிவிடலாம் என்று கேட்டு கம்பால் என் மனைவியின் தலையின் வலதுபக்கத்திலும், வலது முழங்கையிலும் அடித்து இரத்தக்காயப்படுத்தினார், தலையில் மண்டை உடைந்தும், முழங்கையில் எலும்பு தெறித்திருந்தது. நான் அப்போது வயலிலிருந்து வந்துகொண்டிருந்தேன், அப்போது சுமதி என்பவர் போன் மூலம் எனக்கு தகவல் சொல்லி சம்பவ இடம் வந்தபோது ஆம்புலன்ஸ் வந்து என் மனைவியை ஏற்றிக்கொண்டிருந்தார்கள். பின்னர் நானும் என் மனைவியுடன் ஆம்புலன்சில் மேலூர் அரசு மருத்துவமனை சென்று என் மனைவியை சிகிச்சைக்கு சேர்த்தேன். பின்னர் போலீசார் இரவு 8 மணியளவில் வந்து என் மனைவி கண் விழித்தவுடன் அவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து அதை படித்துக்காண்பித்தார்கள். அதில் அறிவேன் சாட்சியாக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் மனுவிலுள்ள கையெழுத்து என்னுடையதுதான். .போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 3

Name : Sathya Father/Husband Name: Kanithavam

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 05.02.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். வீட்டுக்குடித்தனம் செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். அவர் எங்கள் பக்கத்து வீட்டுக்காரர். கடந்த 18.05.17ம் தேதி மாலை 05.30 மணியளவில் அ.சா.1-ன் வீட்டருகே எதிரி தெய்வேந்திரன் வந்து அ.சா.1ஐ அசிங்கமாக தேவடியா மூக்கரச்சி என்று பேசி சத்யா என்பவளை எனது அண்ணன் அடித்தால் உனக்கென்ன நீ எதற்கு வருகிறாய் என்று சொல்லி கட்டையை வைத்து அ.சா.1-ன் வலதுபக்க தலை மற்றும் கையிலும் அடித்து இரத்தக்காயமானது. அவர் மயக்கமாகிவிட்டார். நாங்கள் அவர்களை விலக்கிவிட்டோம். பின்னர் ஆம்புலன்சிற்கு தகவல் சொல்லி வந்ததும் ஆம்புலன்சில் அ.சா.1ஐ ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்துச்சென்று மேலூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தேன். அ.சா.1 ஒருவாரம் மருத்துவமனையில் உள்நோயாளியாக சிகிச்சையிலிருந்தார். நான் அவருடன் மருத்துவமனையிலேயே இருந்தேன். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை: இல்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 4

Name : Arichandran Father/Husband Name: Periyakaruppan

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 05.03.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரி தெய்வேந்திரனை தெரியும். சுமார் 2 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை கூமார் 4 மணியளவில் எதிரி தெய்வேந்திரன் பூமாலை வீட்டிற்கு சென்று கம்பை வைத்து அவரை தலையில் அடித்து தலை உடைந்து ரத்தக்காயமானது. என் அண்ணன் அழகு என்பவரும் எதிரியிடம் ஏன் பொம்பலையை அடிக்கிறாய் என்று கேட்டதற்கு அவர் எதையும் புரிந்துகொள்ளவில்லை, பூமாலையை அவரது கணவர் ஆம்புலன்சில் மருத்துவமனைக்கு கொண்டு சென்றார்கள். நாங்கள் வந்துவிட்டோம். போலீசார் என்னை விசாரித்தனர்.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 5

| | | | |
|---|---|---|---|
| Name | : Alagu | Father/Husband Name: Periyakaruppan | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 05.03.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரி தெய்வேந்திரனை தெரியும். இருவரும் எங்கள் உறவினர்கள். சுமார் ஒன்றரை வருடங்களுக்கு முன்பு ஒருநாள் மாலை கூமார் 5 மணியளவில் எதிரி தெய்வேந்திரன் பூமாலை வீட்டிற்கு சென்று பூமாலையும், சத்யா என்பவரம் இருந்தபோது கம்பை வைத்து அடிக்க சென்றார், சத்யா ஓடிவிட்டார். பூமாலையை தலையில் அடித்து தலை உடைந்து ரத்தக்காயமானது. பின்னர் நானும் என் தம்பி அரிச்சந்திரனும் எதிரியை விலக்கிவிட்டோம். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 6

Name : Sumathi Father/Husband Name: Harichandran

Village : Taluk :

Caste : Calling :

Religion : Age :

Date : 03.09.2021

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். கூலிவேலை செய்கிறேன். அ.சா.1ஐ தெரியும். ஆஜர் எதிரி தெய்வேந்திரனை தெரியும். சம்பவம்பற்றி எனக்கு எதுவும் தெரியாது. போலீசார் என்னை எங்கள் வீட்டில் வந்து விசாரித்தார்கள், என்னை விசாரிக்கவில்லை.

(சாட்சி 161 குவிமுச பிரிவில் சொன்ன வாக்குமூலத்திற்கு முரணாக சாட்சியம் அளித்ததால் அரசுதரப்பில் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கேட்டுக்கொண்டதால் அனுமதிக்கப்படுகிறது. )

குறுக்கு விசாரணை :அரசுதரப்பில்

போலீசார் விசாரணையில் கடந்த 18.05.17ம் தேதி இரவு 17.30 மணிக்கு பூமாலையும் அமராவதியும் அவர்களின் வீட்டின் முன்பு இருந்தபோது எதிரி தெய்வேந்திரன் என்பவர் கையில் கம்புடன் வந்து பூமாலையை பார்த்து அசிங்கமாக பேசி கையில் வைத்திருந்த கம்பால் அ.சா.1-ன் வலதுபக்க தலை, வலது முழங்கையில் அடித்து சாதாரண காயத்தை ஏற்படுத்தியதை நான் நேரில் பார்த்தேன் என்று சொல்லிவிட்டு தற்போது எதிரி கேட்டுக்கொண்டதால் அவருக்கு சாதகமாக பொய்சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, MELUR.
C.C.No. 48 /2020

Deposition of witness for: PW - 7

| | | | |
|---|---|---|---|
| Name | : Manoj | Father/Husband Name: Nalluchamy | |
| Village | : | Taluk | : |
| Caste | : | Calling | : |
| Religion | : | Age | : |
| Date | : 03.09.2021 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 2021.

முதல் விசாரணை:

நான் கைலம்பட்டியில் வசிக்கிறேன். விவசாயவேலை செய்கிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரிலுள்ள 2-வது கையெழுத்து என்னுடையதுதான். 3 அல்லது 4 வருடங்களுக்கு முன்பு ஒருநாள் எங்கள் ஊரிலுள்ள ரோட்டில் நான் வந்துகொண்டிருந்தபோது போலீசார் வந்து சம்பவ இடத்தை பார்வையிட்டு படம் வரைந்து சாட்சியாக கையெழுத்து கேட்டதன்பேரில் நான் கையெழுத்து செய்தேன். பார்வை மகஜர் அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தனர்.

குறுக்கு விசாரணை:

நான் படம் வரைந்திருந்த பேப்பரில்தான் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான், அதில் என்ன எழுதியிருந்தது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான்.